[1984 மார்ச் 27

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வருகிறவர்கள், ஏழை விவசாயிகளுக்காக கொண்டுவரப் பட்ட குத்தகை பாதுகாப்புச் சட்டத்தில் தான் அவர்கள் புகலிடம் தேடிக் கொள்கிறார்கள். ஆகவே, குத்தகை வசூல் செய்ய முடியாததற்குக் காரணம் அந்தச் சட்டத்தில் நியாயமற்றமுறையில் அவர்கள் பாதுகாப்புப் பெறுவது தான். ஆகவே, குத்தகை பாதுகாப்புச் சட்டத்தில் கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஏழை எளிய விவசாயிகளுக்கு, வெள்ளத்தினாலேயோ அல்லது வறட்சியினாலேயோ விளைச்சல் இல்லாமல் இருந்து அவர்கள் அந்தக் குத்தகை நெல்லையோ அல்லது தொகையையோ கொடுக்க முடியாமல் இருந்தால் அரசாங்கமே அனுமதி அளித்து வஜா செய்கிறது. ஆனால், இதைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய அளவில் பல பேர்களில் இந்த நிலங்களைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஆலயங்களுக்குத் தர வேண்டிய அந்த 25 சதவீதம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை இருக்கிறதே அதைக் கூடத் தராமல் நீண்டகாலமாக இப்படிப் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து, இப்படிப்பட்ட ஆலயங்களின் நிர்வாகத்தைக் காப்பாற்றுவதற்காக, இப்படிப்பட்ட ஆலயங்களுக்கு நிதி ஒழுங்காக வந்து சேருவதற்காக இதற்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான சட்ட முன் வடிவைக் கொண்டு வருவதைப் பற்றிச் சட்டத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழுள்ள நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்கான கட்டணம்.

470 —(*வினா எண் 11949) திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்குத் தணிக்கைக் கட்டணம் எவ்வாறு வசூலிக்கப்படுகிறது ?

(ஆ) தற்போது நிலுவையில் உள்ள தணிக்கைக் கட்டணத் தொகை எவ்வளவு ?

(இ) நிலுவையை வசூலிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : (அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டம் 1959 பிரிவு 92(2)ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் ரூபாய் ஆயிரத்திற்கு மேல் ஆண்டு வருமானமுள்ள, இந்து சமய நிறுவனங்களிடமிருந்து ஆண்டொன்றிற்கு $1\frac{1}{2}$ சதவீதம் வீதம் கேட்பு பிறப்பித்து சம்பந்தப்பட்ட உதவி ஆணையரால் சரக ஆய்வர் மூலமாக ஆலய நிர்வாகிகளுக்கு சார்வு செய்யப்பட்டு தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) நிலுவையில் உள்ள தொகை (31—12—1983 நிலவரப்படி) ரூ. 47,10,768.

(இ) அவ்வப்போது ஆணையரால் உதவி ஆணையர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டும், முகாம் செல்லும்போது நேரில் அறிவுறுத்தப்பட்டும், மாதவாரியாக அறிக்கை கேட்கப்பட்டும், அவைகளின் திறனாய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டும், தீவிர வசூல் இயக்கம் மூலமாகவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

திருவரங்கத்தில் அறநிலையத் துறையின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் திட்டம்

471—(*வினா எண் 17964) திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் அறநிலையத்துறையின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலைனயில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

(இ) அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழவில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS